**கவனிக்க.-** *2017.08.18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* III *மற்றும் பகுதி* IV*(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2034 - 2017 අගෝස්තු මස 25 වැනි සිකුරාදා - 2017.08.25

*2034 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1449* |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | *1453* |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | *1455* |
| ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் | *1448* | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) நீதித்துறை (திருத்தம்) சட்டமூலம் 2017, ஓகத்து மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மோட்டார் வாகனம் (திருத்தம்) சட்டமூலம் 2017, ஓகத்து மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017,செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும்

## வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2018
## (2018, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2018, திசெம்பர் 31 ஆந் திகதி வரை)

2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்போது தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களிலும் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக முத்திரையிடப்பட்ட உறையில் இட்டு இடதுபக்கத்தின் மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் "............................................. இலக்க ............................. கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2017.09.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்னர் வத்தளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் வத்தளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடவேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து 20 ஆந் திகதியன்று 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2017.09.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் வத்தளை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய விற்பனை பெறத்தவறும் தவறணைகள் எதுவுமிருப்பின் இவைகளுக்கான விற்பனை மீண்டும் 2017.11.15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

7. இது பற்றிய மேலதிக விபரங்களை வத்தளை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பீ. டீ.ரீ.சீ.ராஜிகா,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை.
2017, ஓகத்து 01.

### அட்டவணை

| இலக்கம் | பிரிவு | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்பு பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1. | வத்தளை | திம்பிரிகஸ்யாய | 2017.09.19 - மு. ப. 10.30 | 7,260 |
| 2. | வத்தளை | உஸ்வெடகெய்யாவ | 2017.09.19 - மு. ப. 10.30 | 4,840 |
| 3. | வத்தளை | போபிட்டிய | 2017.09.19 - மு. ப. 10.30 | 7,260 |
| 4. | வத்தளை | மஹவத்த | 2017.09.19 - மு. ப. 10.30 | 6,050 |

8-929

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## ஆர்.எச். வஹிபா ( பிறைவேட்) லிமிட்டட் கூட்டிணைப்பு பற்றிய பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ்.-*

*பீவீ 123591 ஆம் கம்பனி பதிவிலக்கத்தின் கீழ் 2017, யூலை 04 ஆந் திகதி ஆர்.எச் வஹிபா ( பிறைவேட்) லிமிட்டட் கூட்டிணைக்கப் பட்டுள்ளதென்றும் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி இல. 87/1, காலி வீதி, களுத்துறை எனவும் நாம் இத்தால் தெரிவித்துக்கொள்கிறோம்.*

நிரோஷி ருக்லாந்தி பரணகம,
கம்பனிச் செயலாளர்.

இல. 46/19 B, ரொபேட் டிறைவ்,
ரொபேட் குணவர்தன மாவத்தை,
கிருலப்பனை.

8- 786

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1)ஆம் பிரிவின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-*

கம்பனியின் பெயர்: பென்டொமெத் சொப்ட்வெயார் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 124300
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.07.28
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல.16, பத்தேகம வீதி, ஹிரிம்புர, காலி

கம்பனிச் செயலாளர்.

8-833

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்.-*

கம்பனியின் பெயர்: ஸ்பெக்ட்ரம் டிரெய்னர்ஸ் அன்ட் கோப்பரேட் கன்சல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 123980
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.07.18
பதிவு முகவரி : இல.137/6, கலல்கொட வீதி, பன்னிப்பிட்டிய

8-835

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பின்வரும் கம்பனி 2017.07.10 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-*

கம்பனியின் பெயர் : லெசோமால் டெவலப்மன்ட் கழம்பு (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 123676
பதிவு முகவரி : இல. 47, அலெக்ஸான்றா பிளேஸ், கொழும்பு 7

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
( பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-842

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ், பெயர் மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-*

கம்பனியின் புதிய பெயர் : குவேஸ் கோப் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பழைய பெயர் : ரென்டிஸ்டட் லங்கா ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 12225
கம்பனியின் பெயர் மாற்றமான திகதி : 2017.01.13
பதிவு செய்யப்பட்ட முகவரி : 7 ஆம் மாடி, பிஓசி மர்சன்ட் டவர் , 28, சென் மைகல் றோட், கொழும்பு 3

8-843

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-*

கம்பனியின் பெயர்: யூரோபியன் ஏவியேஷன் கென்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 121087
பதிவு முகவரி : இல. 33, டொக்டர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 5

B.P.T. பீரிஸ் ,
கம்பனிச் செயலாளர்கள்.

8-888

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவு.-

கம்பனியின் பெயர்: ரோயல் பிஸ்னஸ் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 120167
பதிவு முகவரி : இல.20, 1/1, ஷ்ரப்பி கார்டன்ஸ், கொழும்பு 4

கம்பனியின் பெயர்:ரேட்ன்ட் கலம்பு (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 120858
பதிவு முகவரி : இல.17-6, பார்க் டவர் , ஹவ்லொக் சிட்டி, கொழும்பு 6

கம்பனியின் பெயர்: ஓர்கனிக் கார்டன்ஸ் ஜப்னா (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 121073
பதிவு முகவரி : ராஜி வாசா, மல்லாகம்

கம்பனியின் பெயர்: பேர்டிஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 121236
பதிவு முகவரி : இல.22,டபிள்யூ. ஏ.டி.ராமநாயக்க மாவத்தை,கொழும்பு 2

கம்பனியின் பெயர்: லங்கா வைபிரேஷன் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 122022
பதிவு முகவரி : அம்பிட்டிய வட்டா, வெலங்கொடை, அஹூங்கம

கம்பனியின் பெயர்: வீ என் ஜீ டிரேடிங் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 122571
பதிவு முகவரி : இல. 31/23,2 ஆம் லேன், ரபீர் வத்த வீதி, கங்கொடவில, நுகேகொடை

கம்பனியின் பெயர்: ஏ ஸ்டார் இன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 122206
பதிவு முகவரி : இல. 360/1, பழைய மூர் வீதி, கொழும்பு 12.

கம்பனியின் பெயர்: சீமெக்ஸ் சிமென்ட் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 122926
பதிவு முகவரி : இல. 51/1, நீர்கொழும்பு வீதி, வத்தளை

கம்பனியின் பெயர்: ஜே.சீ.சிவில் இன்ஜினியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 122958
பதிவு முகவரி : 110, கல்கனுவ ரோட், கொரகாண, கெசெல்வத்த, பாணந்துறை

கம்பனியின் பெயர்: சீ சன் சான்ட் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 123375
பதிவு முகவரி : அம்பிட்டிய வட்டா, வெலங்கொட, அஹூங்கம

கம்பனியின் பெயர்: சவுத் ஏஷியன் லீன் கன்ஸ்ட்ரக்ஷன் இன்ஸ்டிடியூட்
பதிவிலக்கம் : ஜீஏ 3361
பதிவு முகவரி : இல. 4 1/2, பம்பலப்பிட்டிய டிரைவ், கொழும்பு 4

கம்பனியின் பெயர்:எஸ். எஸ். மெட்கோன் இன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 123696
பதிவு முகவரி : இல. 280, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 8

கம்பனியின் பெயர்: டெய்ரி டிவலப்பர்ஸ் அசோசியேஷன் லங்கா (கரண்டி) லிமிட்டட்
பதிவிலக்கம் : ஜீ எல் 2439
பதிவு முகவரி : இல. 32/11, காம்பி பள்ளத்தாக்கு , ஹெற்றன்

கம்பனியின் பெயர்: ப்ரிமெல்தி (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 124124
பதிவு முகவரி : இல. 73/3, சென்ட் ரிதாஸ் ரோட், இரத்மலானை

கம்பனியின் பெயர்:எஸ். எஸ். டெக்னிகல் சேர்விஷஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 124126
பதிவு முகவரி : இல. 450, பிலப்பிட்டிய, களனி

8- 901

---

## அறிவித்தல்

2017, யூலை 25 ஆந் திகதி டிரவிமா லங்கா (பிறைவேட்) லிமிட்டட் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: டிரலிமா லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பிவி 123899
பதிவு அலுவலகம் : லொட் இல.01, வகாவத்த, BOI
கைத்தொழில் தோட்டம்,
வகாவத்த, ஹொரணை

கோப்பரேட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்.

8- 907

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: வூட் லீட் லங்கா இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 123497
திகதி : 2017.06.30
முகவரி : இல. 18-4/2, சன்சிடி, புனித அந்தோனியார் மாவத்தை, கொழும்பு 03

செயலாளர்.

8- 939

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர்: ஜே.கே. சேலான் இன்டர்நெஷனல் டிரேடிங் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 123785
திகதி: 2017.07.12
முகவரி : இல. 10, சுபைர் ஹாலிம் மாவத்தை, மிரிஸ்வத்தை, பலங்கொடை

கம்பனிச் செயலாளர்.

8- 940

---

## கம்பனி பதிவு செய்வதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கிணங்க அறிவித்தல்.-

கம்பனியின் பெயர்: நாஷோஸ் கஸ்டம் சர்விபோர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.07.13
பதிவு இலக்கம் : பீவீ 123839
முகவரி : இல. 16/3A, வூட்லேன்ட்ஸ் அவெனியு, கொஹுவலை, நுகேகொடை

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.டீ.ஏ.வீ.விஜேகோன் ,
கம்பனிச் செயலாளர்.

8- 951

---

## கம்பனி பதிவு செய்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கு ஏற்ப பதிவு செய்தல்.-

கம்பனியின் பெயர்: டபிள்யூ. ஏ.எம். கொம்பொனட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம் : பிவீ 124442
கம்பனி பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: இல. 61, ப்ளவர் வீதி, கொழும்பு 7

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எம். ஏ.ஆர். பெரேரா ,
கம்பனிச் செயலாளர்.

8- 952

---

## கம்பனி பதிவு செய்வதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கிணங்க அறிவித்தல்.-

கம்பனியின் பெயர்: சில்க்ரோட் பாட்னர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.07.20
பதிவு இலக்கம் : பீவீ 124064
முகவரி : இல. 320, T1 7A2, யூனியன் பிளேஸ், கொழும்பு 2

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.டீ.ஏ.வீ.விஜேகோன் ,
கம்பனிச் செயலாளர்.

8- 953

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 85/10, அருணகிரி வீதி, திருகோணமலை என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி இந்திராணி மைக்கல் அல்லது செல்வி செல்லையா ( தே.அ.அ.இல. 647401574 V) ஆகிய நான் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவது யாதெனில், மூதூர், தபால் நிலைய வீதி, என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. சண்முகம் இராதாகிருஷ்ணன் ( தே.அ.அ.இல. 630121574 V) என்பவரை நியமித்து வழங்கிய, 5379 ஆம் இலக்கம் கொண்ட திருகோணமலை பிரசித்த நொத்தாரிசு திரு. சித்திரவேல் புலேந்திரன் அவர்களால் அத்தாட்சிப்படுத் தப்பட்டு, 2016.08.29 ஆம் திகதியிடப்பட்ட விசேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை ( இவ் விசேட அற்றோணித்தத்துவப்பத்திரம் கிழக்கு மாகாண பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் தொடர் இலக்கம் 696, தாள் 83, புத்தகம் 24 இல் 2016.10.07 ஆந்திகதியில் முறைப்படி பதிவுசெய்யப்பட்டுள்ளது) எனது விருப்பத்தின் பேரிலும், அபிலாஷையின் பேரிலும் 2017.08.01 ஆந்திகதியிலிருந்து இரத்துச் செய்து செல்லுபடியற்றதாக்குகின்றேன் என்பதனை இத்தால் சகலருக்கும் பகிரங்கமாக அறிவிக்கின்றேன். எனவே இவ்வறிவித்தலின் பின் திரு. சண்முகம் இராதாகிருஷ்ணன் (அற்றோணி) எனது சார்பாக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்வதற்கு தகுதியற்றவர் என்றும், இவரால் எடுக்கப்படும் எனது சார்பான எந்தவொரு நடவடிக்கையையும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என்பதையும் இத்தால் தெரியப்படுத் துகிறேன்.

(திருமதி ) இந்திராணி மைக்கல்.

*2017.08.01.*

*8-736*

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மஹர, பேபொட, இல. 348 ஐச் சேர்ந்த கெக்குலாவல விதானலாகே கிறீன் பெரேரா (தே.அ.அ.இல. 411550184V உரித்தாளர்) ஆகிய நான், இத்தால் அறிவித்துக் கொள்வதாவது, பிரசித்த நொத்தாரிசு ஜுட் மனேஷ் வேவிட்டவினால் 2015.12.11 அன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டு, வெலிசறை அமுனுபிட்டியா, 17/2 ஐந் சேர்ந்த முத்து போருதொட்டகே மார்லன் பிராண்டோ பெரேராவிற்கு (தே.அ.அ.இல. 742960293V உரித்தாளர்) வழங்கப்பட்ட 71 ஆம் இலக்க அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாகவும் மற்றும் அது வெற்றும் வெறிதுமாக்கப்பட்டதாக கருதப்பட வேண்டுமென இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

கெக்குலாவல விதானலாகே கிறீன் பெரேரா.

*2017.05.21.*

*8- 844*

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

ட 68/1, நாபே, நெலுந்தெனிய என்ற முகவரியில் வசிக்கும் ஜாலத் துரயலாகே சஞ்ஜீவனி ஜயலத் ஆகிய நான், என்னால் பிரசித்த நொத்தாரிசு திருமதி கே. சியாமலீ இரன்திகா கஹகல்ல பெரேரா என்பவரினால் 2016.09.12 ஆந்திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 839 ஆம் இலக்கமுடைய சிரோமி கார்மண்ட்ஸ், உடுகும்புர, நெலுந்தெனிய என்ற முகவரியில் வசிக்கும் ஜாலத் துரயலாகே சிரோமணி ஜயலத் என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவமானது, இன்று முதல் செயல்வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென அறிவித்துக் கொள்கிறேன்.

ஜாலத் துரயலாகே சஞ்ஜீவனி ஜயலத் .

*2017.05.26.*

*8-858*

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நக்காவத்த, தபால் பிஹல்பொலயில் வசிக்கும், கிரிஹாமி கோரளலாகே தர்மாசோக பண்டார ஆகிய நான், 2007.07.01 ஆந் திகதிய பிரசித்த நொத்தாரிசு டி.பி.சி. எதிரிசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 12089 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தினூடாக நக்காவத்த , தபால் பிஹல்பொலயில் வசிக்கும் தென்னகோன் முதியன்சேலாகே நிரோதா சமந்தினி தென்னகோன் என்பவரை குறித்த அற்றோணித் தத்துவப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட கருமங்களை ஆற்ற எனது அற்றோணிதத்துவத்தைப் பெற்றவராக நியமனம் செய்திருந்தேன்.

எனினும், 12086 எனும் இலக்கத்தையுடைய குறித்த அற்றோணித்தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்யும் தேவை எனக்கு ஏற்பட்டுள்ளது என்பதுடன் 2017.03.16 ஆந் திகதி முதல் குறித்த அற்றோணித்தத்துவப் பத்திரத்தை நான் இரத்துச் செய்கின்றேன் என்பதுடன் எனது அற்றோணித்தத்துவத்தைப் பெற்றவராக இத்தினத்திற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் என்பதையும் அனைவருக்கும் அறிவித்துக் கொள்கிறேன்.

கே.கே.தர்மாசோக பண்டார.
அற்றோணித்தத்துவத்தை வழங்கியவர்.

*8-918*

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 17 பீ, மஸ்ஜித் வீதி, கிருளப்பனை, கொழும்பு 6 என்ற முகவரியில் வசிக்கும் மின்னேரி கமகே தோன கஸ்தூரி தர்மலதா பெரேரா ( தே.அ.அ.இல. 566920387V) ஆகிய நான் பிரசித்த நொத்தாரிசு திரு. கே. காமினி என்பவரினால் 2004, ஓகத்து மாதம் 05 ஆந்திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 178 ஆம் இலக்கமுடைய இல. 139, 4 ஆம் ஒழுங்கை, திக்ஹேனபுர வீடமைப்புத் தொகுதி, ஹொரணை என்ற முகவரியில் வசிக்கும் நாகொட கமகே கருணாரத்ன ( தே.அ.அ.இல. 531622685V) என்பவருக்கு

வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது 2017.08.08 முதல் செல்லுபடியாகும் விதத்தில் இரத்துச் செய்து இல்லாதொழிக் கப்படுகின்றதென இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களிற்கும் இத்தால் அறிவித்துக் கொள்வதுடன் இத்தினத்தின் பின்னர் என் சார்பில் இவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நான் பொறுப்புதாரியல்லவென்பதையும் மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்.

மின்னேரி கமகே தோன கஸ்தூரி
தர்மலதா பெரேரா.

8-919

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு 6, கிருளப்பனை, மஸ்ஜிட் பாதை 17டீ என்ற இலக்கத்தைச் சேர்ந்த (566920387V என்ற தே.அ.அ. இலக்கத்தையுடையவர்) மின்னேரிகமகே டொன் கஸ்தூரி தர்மலதா பெரேரா ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. டி.கருணாதிலக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 842 என்ற இலக்கத்தையும் 2007.09.06 ஆந் திகதியுடையதும் கொழும்பு -06, கிருளப்பனை, காவிந்த இடம், 17 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும் 531622685V என்ற இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டையின் உரித்தாளருமாகிய நாகொட கமகே கருணாரத்ன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இல்லாதொழித்து, நீக்கம் செய்து மற்றும் இரத்துச் செய்துள்ளேன் எனவும் இதனகத்துப் பின்னர் சட்டப்படியான உரிமையில்லையென இலங்கை அரசாங்கத்திற்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

மின்னேரிகமகே டொன் கஸ்தூரி தர்மலதா பெரேரா.

8-920

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 8/77, தொட்டுபொல வீதி, வெலிசர, ராகம , இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு தற்போது இல.206,திக்கெல்லை, கேகாலை எனும் இடத்தில் குடியிருக்கும் வெதலராலகே ஞானவதி (66352513V) ஆகிய நான், இல. 8/1, தேவாலய வீதி, வெலிசர, ராகம, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு எனும் இடத்தில் குடியிருக்கும் ரத்நாயக்க முதியன்சேலாகே அஜந்தா தமயந்தி (677381108V) என்பவருக்கு வழங்கப்பட்ட இலங்கையில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு நாமலி குணரத்ன அவர்களால் 2015.09.05 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்டு, நாட்பதிவேட்டு இல. 3633 பொது அற்றோணித்தத்துவப் பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இரத்துச்செய்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும், அதன் பொது மக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்தல் தருகின்றேன்.

வெதலராலகே ஞானவதி.

8- 943

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கண்டி, போதியங்கன மாவத்தை, இலக்கம் 25 இல் வசிக்கும் உடஹா ரணதுங்க கெதர மஹினாத தனஞ்சய பண்டார ரணதுங்க எனும் நான், என்னுடைய சகோதரரான உடஹா ரணதுங்க கெதர மஹசென் அவிந்திய பண்டார ரணதுங்க என்பவருக்கு எனது அற்றோணி அதிகாரத்தை வழங்கிய பிரசித்த நொத்தாரிசு விராஜ் பண்டார அவர்களின் மூலம் எழுதி சான்றுபடுத்திய இலக்கம் 522 மற்றும் 2003.07.18 ஆந் திகதிய அற்றோணி அதிகாரப் பத்திரத்தை இத்துடன் இரத்து செய்வதுடன் இவ் அற்றோணி அதிகாரப் பத்திரம் இப்பொழுதிலிருந்து சட்டப்படி செல்லாத அதிகாரமற்ற மற்றும் பயனற்ற ஆவணம் என இலங்கை குடியரசிற்கும் மற்றும் இவ்விடயத்தை அறிந்து கௌ்ள வேண்டிய அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

யூ.ஆர்.ஜீ.எம்..டி.பி. ரணதுங்க.

8-938

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவின் வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2018

அரசால் அனுமதிக்கப்பட்ட கீழ்க்காட்டப்படும் பிரதேசத்தில் தகுந்த இடங்களில் 2018, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2018, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை தனியுரிமை அடிப்படையில் கீழ்வரும் நிபந்தனைகளில் வெளிநாட்டு மதுபானங்களை (உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்கள் உட்பட) விற்பனை செய்யும் பொருட்டு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(i) 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபானத் தவறணைகளை குத்தகையில் விற்கும் நிபந்தனைகள்.

(ii) மதுபான வரி அனுமதிப்பத்திரம் தொடர்பாக தற்போதுள்ள பொது நிபந்தனைகள்.

2. கீழ்வரும் நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட மாதிரிப்படிவங்கள் மூலம் கேள்விப்பத்திரங்களை ரூபா5,000 க்கு வைப்பிலிடப்பட்டமைக்கு ஏதேனும் பிரதேச செயலகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடனும் மற்றும் குறிப்பிட்ட பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பான சான்றிதழுடனும் அனுப்பி வைத்தல் வேண்டும். பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பாக சான்றிதழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதேபோன்று அந்த

சான்றிதழில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் சொத்தொன்று விற்கப்படாமலிருப்பின் அந்த ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் 05 வருடங்கள் வரை செல்லுபடியாகும். வாடகை காலம் முடிவடைவதற்கு முன்பு ஆவணச் சான்றிதழின் செல்லுபடி காலம் முடிந்திருப்பின் முழுமையான வாடகைக் காலத்தில் செல்லுபடியானதாக இருக்கக்கூடிய ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் காலத்தில் பாதி நாள் வரையிலான மிகுதி காலத்திற்கு மேலதிக ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை செல்லுபடிக் காலம் முடிவடைவதற்கு முன்பு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னராவது சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்து ;
(ஆ) கொழும்பு 02, ஸ்டேப்பல் வீதி, மதுவரி அலுவலகத்திலிருந்து ;
(இ) கொழும்பு மதுவரிச் சபை அலுவலகத்திலிருந்து.

3. உறையில் இட்டு முத்திரை பொறிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் உள்ளடக்கப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும் :-

“ மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் 09 ஆம் இலக்கமுள்ள வெளிநாட்டு மதுபான விற்பனை தவறணைக்கான கேள்விப்பத்திரம் - 2018”

2017.09.15 ஆந்திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பு மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திர உரிமையாளர்கள் கேள்விப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இறுதி நேரத்தில் மொரட்டுவை பிரதேச செயலகத்திற்கு வருதல் வேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் அச்சந்தர்ப்பத்திலேயே கொள்வனவு செய்தவராக அறிவிக்கப்படுவதுடன் குறிக்கப்பட்ட பணத்தை வைப்புச் செய்யப்பட்ட பிணைக் கட்டணமாக மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளருக்கு அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதும் வாடகைக்கு விடுதலுக்கான நிபந்தனைகளில் கைச்சாத்திட அல்லது குறிப்பிட்ட பிணைப் பணத்தை எதிர்காலத்தில் வைப்பிலிடத் தவறுமிடத்து அவர் வைப்பிலிட்ட கேள்விப்பத்திர பிணைப் பணத்தை இழப்பதுடன் அவரை குற்றவாளியென மதுவரி அனுமதிப்பத்திரக்காரர்களின் பட்டியலில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் முழுமையான பிணைப்பணத்தை வைப்பிலிட்டு விற்பனை செய்யும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட பின்னர் கேள்விப்பத்திர உரிமையாளர்களின் கேள்விப்பத்திர பிணைப்பணம் மறுபடி செலுத்தப்படும்.

6. எக்காரணமும் அறிவிக்கப்படாமல் ஒன்றையோ அல்லது அனைத்து கேள்விப் பத்திரங்களையோ மறுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. இந்த வெளிநாட்டு மதுபான தவறணைகள் நிலையத்தை பிரிவு இலக்கம் 09 இல் நிறுவுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர் பிரிவினுள் தகுதியுள்ள கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதன் பொருட்டு மதுவரி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கட்டிடமொன்றைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பினை பிரதேச செயலாளர் கொண்டிருக்கவில்லை. அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகள் பட்டியல் கீழ்வருமாறு:-

| (அ) இலக்கம் | (ஆ) பிரிவு | (இ) மதுபான தவறணை உள்ளடக்கப்படும் பிரதேசம் | (ஈ) மதுபான தவறணை திறக்கப் படும் நேரம் | (உ) மதுபான விற்பனை நிலையம் மூடப்படும் நேரம் | (ஊ) கேள்விப் பத்திரத்தின் பொருட்டு வைப்பிலிடப் படும் தொகை ரூபா | (எ) கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதி நேரம் | (ஏ) விற்கப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மொறட்டுவை மாநகரசபை எல்லைக்குள் பிரிவு இல. 09 | மொறட்டுவை மாநகர சபை பிரதேசத்தில் பிரிவு இல. 09 காலிப் பாதையின் மேற்குப் பிரதேசத்தில் அமைந் துள்ள மொரட்டுவெல்ல கிராமத்தில் மாத்திரம். | மு.ப.11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | மு. ப. 10.30 | 2017.09.15 |

8. மேலதிக விபரங்களை மொறட்டுவை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

9. **குறிப்பு**.- 2017.09.15 ஆந் திகதிக்கு வாடகைக்குவிட இயலாத வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் 2017.11.17 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறுபடியும் குத்தகையில் விற்கப்படும்.

எச். ஆர்.எச். கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
மொறட்டுவை.

பிரதேச செயலகம்,
மொறட்டுவை,
2017, ஓகத்து 08.

8-834

---

## ஏல விற்பனைகள்

### நெஷனல் டிவலப்மன்ட் பேங்க் பீஎல்சீ - (யாழ்ப்பாணக் கிளை)

பகிரங்க ஏல விற்பனை

**1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை**

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட சுண்டிக்குளி கிராமத்தில் ஸ்வாட்ஸ் ஒழுங்கையில் அமைந்துள்ள "மஞ்சானவடி வளவு" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். சிவராஜா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.08.24 ஆந் திகதியிடப்பட்ட 189 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 1 எனும் காணித்துண்டு மற்றும் அதனுள்ளடங்கும் இருமாடி வீடும், மரங்கள், பயிர்கள், கிணறு மற்றும் சகலதுமாகும். இது இரண்டு V. C. லாட்சம் மற்றும் இரண்டு தசம் ஒன்று ஐந்து குழிகள் பரப்பளவானதாகும். (02 Lms VC மற்றும் 2.15 Kls)

இவ்வாதனம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்பு மாரியா என்டனி மற்றும் ஜெயசீடா ஜொசபில் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக நெஷனல் டிவலப்மன்ட் பேங்க் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்** - யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்திலிருந்து வைத்தியசாலை பாதையில் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் சென்றதும் சுண்டிக்குளி U.S. ஹோட்டலை அடையலாம். இந்த ஹோட்டலுக்கு முன்னால் வைத்தியசாலை பாதையில் வலதுபக்கத்திலுள்ள ஸ்வாட்ஸ் ஒழுங்கைக்குள் பிரவேசித்து மேலும் சுமார் 100 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனத்தை 2017.09.20 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு** .- 2017.04.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2017.04.07 ஆந் திகதிய "திவயின" "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- :-விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேசசபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 750 ரூபா ;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2000 ரூபா;

கொள்முதல் மிகுதி 90% மும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- "முகாமையாளர் மையப்படுத்தல் (கடன் அறவிடுதல்), நஷனல் டிவலப்மன்ட் வங்கி பீஎல்சீ, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 02" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2448448.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவேல்ல பாதை,
மாவில்மட, கண்டி
தொலைபேசி : 071-4962449/071-8446374
தொலைநகல்: 081-2210595

8- 862

**இந்தியன் வங்கி - (கொழும்பு பிரதான கிளை)**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

***மிகவும் பெறுமதிமிக்க வசிப்பிடத்திற்கு பொருத்தமான சொத்து.***

***கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட வெள்ளவத்தை தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள பொன் எயார் என்றழைக்கப்படும் மஹவெல்லவத்த எனும் காணி உரிமம் பெற்ற நில அளையாளர் G. சந்திரசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001, யூன் 20 ஆந் திகதிய 2001/153ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 5944 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் வரிப்பண இல. 30-3/4 விவேகானந்த பாதையில் அமைந்துள்ள ஒன்றிணைந்த ஏழு மாடி வீட்டுக் கட்டிடத் தொகுதியில் மேற்கூறிய ஒன்றிணைந்த வரைபட இல. 2001/153 இல் 3ஆம் மாடியில் அடையாளமிடப்பட்டுள்ள 5944F3/U4 எனும் ஒன்றிணைந்த வீடும் மற்றும் சகலதுமாகும். மேற்கூறிய F3/U4 வீட்டுத் தொகுதி 106.89 சதுர மீற்றர் (1150.13 சதுர அடி) பரப்பளவாதாகும்.***

(இவ்வாதனம் கொலோனியல் டிரேட் (பிரைவெட்) லிமிட்டெட் இன் பணிப்பாளரான நடராஜா கோகுல்ராஜ் என்பவர் கடப்பாடுடையவராக இந்தியன் வங்கியினால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக இந்தியன் வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட ஆதனம்.)

மேற்சொல்லப்பட்ட காணியை 2017.09.18 ஆந் திகதி பி.ப.2.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- 2017.02.09 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும்,2017.01.30 ஆந் திகதிய“திவயின”, “த ஐலண்ட்” மற்றும் “தினக்குரல் ” பத்திரிகைகளையும் பார்க்கவும்.

***கொடுப்பனவு முறை.***- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 750 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் 2000 ரூபா .

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** சிரேஷ்ட முகாமையாளர், இந்தியன் வங்கி, இல. 57, ஸ்ரீமத் பாரோன் ஜயதிலக்க மாவத்தை, கோட்டை, கொழும்பு 01. தொலைபேசி: 011-2323402, 2323403, 2447163 பெக்ஸ் 011-2447562

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி/தொலைநகல்: 081- 2210595
கையடக்கத் தொலைபேசி: 071- 4962449, 071- 8446374 .

8-863

---

**செலான் வங்கி பீஎல்சீ - யாழ்ப்பாணக் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

***ஏல விற்பனை***

செலான் வங்கி பீஎல்சீ சார்பாக பிரசித்த நொத்தாரிசு வி.ரி. சிவலிங்கம் எழுதி அத்தாட்சிப்படுத்திய 2013,திசெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட 3221 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது செலுத்தப்படவேண்டிய பணத்தொகையை கடன்பட்டவரான கொக்குவிலில் வதியும் தேவருல்ராஜா விமலகாந்த்/ எசகில் தேவருல்ராஜா அவர்கள் செலுத்தத் தவறியுள்ளார்.

***அட்டவணை 1***

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், உடுவில் பிரதேச சபை பிரிவு உடுவில் இறை கிராம அலுவலர் பிரிவு ஜே/193 இல் அமைந்துள்ள ‘கன்னியாவலை’ என அழைக்கப்படும் காணி இதன் மொத்த விஸ்தீரணம் 7 லாச்சம் 16.52 குளி . இக் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். சுப்ரமணியம் அவர்களால் 2012.03.20 ஆந் திகதியிடப்பட்ட 2054 ஆம் இலக்க படத்தில் அளந்து விஸ்தரிக்கப்பட்டு லொட் 1 என அடையாளப்படுத்திய காணித் துண்டு. இக் காணித்துண்டின் விஸ்தீரணம் 3 லாச்சம் 17.26 குளி.

மேற்குறித்த ஆதனத்தை பகிரங்க ஏல விற்பனை மூலம் அதே இடத்தில் வைத்து 2017, செத்தெம்பர் 13 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு விற்பனை செய்வேன்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.-** குலாபிட்டி சந்தியிலிருந்து காங்கேசன்துறை வீதி ஊடாக 150 மீற்றர் பயணிக்கவும். பின்பு இடப்பக்கம் திரும்பி முதலிகோவில் வீதியூடாக 150 மீற்றர் சென்று வலது பக்கம் நந்தவில் குறுக்கு ஒழுங்கையில் திரும்பி 250 மீற்றர் செல்லவும், பின்பு வலப்பக்கமுள்ள தனியார் ஒழுங்கையில் 50 மீற்றர் செல்லவும். இக் காணியை குறித்த ஒழுங்கையில் முடிவில் காணலாம். குலாபிட்டி சந்தி யாழ்ப்பாண நகரத்திலிருந்து காங்கேசன்துறை வீதி ஊடாக 3.75 கி.மீ. தூரத்தில் உள்ளது.

### அட்டவணை 2

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் ,வலிகாமம் வடக்கு பிரதேச சபை பிரிவு உடுவில் இறை வ கிராம அலுவலர் பிரிவு ஜே/ 193 இல் அமைந்துள்ள ‘ தெய்னன் வளவும் ஏயன்கனி ஆவலையும்’ என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரி. தங்கராஜா அவர்களால் 2010.07.07 ஆந்திகதியிடப்பட்ட 594/1 ஆம் இலக்க படத்தில் அளந்து விஸ்தரிக்கப்பட்ட லொட் 1 என அடையாளப்படுத்திய காணித்துண்டு . இக் காணித்துண்டின் விஸ்தீரணம் 2 லாச்சம் மற்றும் அதனுடன் இணைந்த சகலதும்.

அத்துடன் குறித்த படத்தில் லொட் 4 என அடையாளமிடப்பட்ட வீதியை நோக்கிச் செல்லும் 10 அடி அகல பாதையை பாவிப்பதற்கான உரிமை, லொட் 5 இல் அமைந்துள்ள கிணற்றினதும் லொட் 6 இல் அமைந்துள்ள தூர்வையின் பங்கும் மற்றும் லொட் 2 ஊடாக உள்ள வழிவாய்க்கால் உரித்தும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.-** குலாபிட்டி சந்தியிலிருந்து காங்கேசன்துறை வீதி ஊடாக 150 மீற்றர் பயணிக்கவும். பின்பு இடப்பக்கம் திரும்பி முதலிகோவில் வீதியூடாக 150 மீற்றர் சென்று வலது பக்கம் நந்தவில் குறுக்கு ஒழுங்கையில் திரும்பி 300 மீற்றர் செல்லவும், குறித்த வீதியின் வலப்பக்கத்தில் இக் காணி அமைந்துள்ளது. குலாபிட்டி சந்தி யாழ்ப்பாண நகரத்திலிருந்து காங்கேசன்துறை வீதி ஊடாக 3.75 கி.மீ. தூரத்தில் உள்ளது.

மேற்குறித்த ஆதனத்தை பகிரங்க ஏல விற்பனை மூலம் அதே இடத்தில் வைத்து 2017, செத்தெம்பர் 13 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு விற்பனை செய்வேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.-** 2017.07.07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2017.06.30 ஆந் திகதிய “லங்காதீப” “டெயிலி மிரர்” , பத்திரிகைகளையும் மற்றும் 2017.06.27ஆந் திகதிய “தினக்குரல்” பத்திரிகையையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் விதம்.-** வெற்றிகரமான கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%;
(4) நொத்தாரிசுக் கட்டணம் உறுதிப்படுத்தல் மற்றும் விற்பனை நிபந்தனைகள் 2000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500;
(6) முழு விளம்பரச் செலவு .

மிகுதி 90% கொள்வனவு விலை மற்றும் இலங்கை அரசால் விதிக்கப்படும் வேறேதேனும் நியதிச்சட்ட விதிப்பனவு , வரி, கட்டணம் ஆகியன ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீக்குச் செலுத்தப்படல் வேண்டும். குறிப்பிட்ட காலவரையறையினுள் குறித்த மிகுதித்தொகையை வைப்பிலிடத் தவறின் உத்தேச கொள்வனவாளரால் செலுத்தப்பட்ட பணத்தொகை பறிமுதல் செய்யப்பட்டு புதிய ஏலவிற்பனை நடத்தப்படும்.

“காணி உறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை சட்ட முகாமையாளர், செலான் வங்கி(வரையறுக்கப்பட்ட தனியார்) நிறுவனம் செலான் கோபுரம், இல.90, காலி வீதி, கொழும்பு 3 இடமிருந்து பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-2456485, 011-2456479 மற்றும் 2456488.

சந்திமா பிரியதர்சனி கமகே,
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

இல. 9-1, ஹைலெவல் ரோட்,
சர்வோதய மாவத்தை,
பனாகொடை,
ஹோமாகமை.

தொலைபேசி: 071-4318251, 011- 2173282.

8- 931

---

## டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ

(டிஎப் சீ சீ வர்தன வங்கி பீஎல்சீ யின் பதிலாள்)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**1716 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகுவைக்கப்பட்ட உடமையின் விபரம்.-**

**ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பண்டாரவளை பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட மஹபலாத்த கோரளே, பண்டாரவளை நகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட பண்டாரவளை நகரம் கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட**

**'கொடபத்தன' மற்றும் 'முலதகும்புற' என அழைக்கப்படும், பிரதான வீதி, பண்டாரவளை என்னும் இடத்தில் அமைந்துள்ள, அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் டி.சுதத் அருண ரஞ்ஜன அவர்களால் வரையப்பட்ட 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதியிடப்பட்ட 1914 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள (அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எச்.எம்.ஹேரத் அவர்களால் வரையப்பட்ட, 2003 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதியிடப்பட்ட 2166 ஆம் இலக்க வரைபடத்தின், துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் மீள் அளவையாகும்) பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு .**

**காணியின் விஸ்தீரணம் 00ஏ. 0றூ.2.4பே. (இரண்டு தசம் நான்கு பேர்ச்) அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக**

பண்டாரவளை பிரசித்த நொத்தாரிசு கென்னத் கொட்வின் டி சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2015 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதியிடப்பட்ட 1716 மற்றும் 1718 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் பண்டாரவளையைச் சேர்ந்த பொன்னுத்துரை ராஜேந்திரன், ராஜேந்திரன் சுகந்தன், ராஜேந்திரன் கோகிலவதி மற்றும் ராஜேந்திரன் சுதர்ஷன் ஆகியோரால் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ (டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ யின் பதிலாள்) க்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ யினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, 2017ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;

(4) மொத்த விளம்பரச் செலவு 1,25,000 ரூபா ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 1,000 ரூபா;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் பீஎல்சீ சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
125 வருடகால மகோன்னத சேவை.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : 24, டொரிங்டன் வீதி, கண்டி. | நகர அலுவலகமும் காட்சியறையும்: 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011- 2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

8-928

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இலக்கங்கள். 79066000, 79066010 மற்றும் 78447487.

கெகிராவ, யகல்ல வீதி, லினாவ வளவ்வ, இல. 21 ஐச் சேர்ந்த

1. திரு. சஞ்சய சுரங்க பண்டார செனவிரத்ன

2. திருமதி வதுப்பொல வளவ்வ செனவிரத்ன முதியன்செலாகே யமுனா குமாரி அல்லது வதுபொல வளவ்வ செனவிரத்ன முதியன்சேலாகே யமுனா குமாரி செனவிரத்ன

3. திருமதி தென்னகும்புர கெதர சுவர்ணா குமாரி

4. கல்நேவ, புதிய நகரம், பாடசாலை சந்தி என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ஹந்துன்கிரி குமாரசிங்ஹ முதியன்சேலாகே ஜகத்

ரோஹித்த குமாரசிங்ஹ ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2017.05.19 ஆந் திகதிய 2020ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2017.05.04 ஆந் திகதிய வியாழக்கிழமை தினமின , தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் , அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 290, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் & சமரவிக்ரம ஏல நிறுவனத்தின் ஏலதாரர் 2017.10.11 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

## முதலாவது அட்டவணை

1. வட மத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டத்தில் , கெக்கிராவ பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் கவாகம் பலாத்தயில் , கலாகம் கோரளை தெற்கில் கிராம அலுவலர் பிரிவு கெகிராவ குடா இல. 629 இல் குடா கெகிராவ, கிராம யகல்ல வீதியில் அமைந்ததும் நில அளவையாளர் நாயகத்தின் பி.ஓ. பி. இல. 908 இல் ''கொட'' என அழைக்கப்படும் காணியின் குறித்த காணித்துண்டு வடக்கு: நீர் விநியோக சபையின் காணியும் ; கிழக்கு: ஒழுங்கையும் ; தெற்கு: ஒதுக்கப்பட்ட யகல்ல பாதையும் ; மேற்கு : இந்திரா குமாரி அளுதெனியவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது அநுராதபுரம் மாவட்ட காணிப் பதிவகத்தில் L.D.O.R./11/35 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. டி. தஸநாயக்க தயாரித்த 2006, ஓகத்து 26 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபட இல. 9822 இன் படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட குடா கெக்கிராவ கிராமத்தில் அமைந்த ''கொட இடம'' என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. டி. தஸநாயக்க தயாரித்த 2006, ஓகத்து 26 ஆந் திகதியிட்ட வரைபட இல. 9822 இல் விபரித்த துண்டு இல. 01 என அடையாளமிட்ட காணித்துண்டு - வடக்கு: நீர் விநியோக சபையின் காணியும் ; கிழக்கு : பாதையும் (பி. ச.); தெற்கு : ஒதுக்கப்பட்ட யகல்ல பாதையும் ; மேற்கு : இந்திரா குமாரி அளுதெனியவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) அல்லது சைபர் தசம் இரண்டு சைபர் இரண்டு மூன்று ஹெக்டெயர்கள் (ஹெக்.0.2023) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

கெகிராவ பிரதேச செயலாளரின் 2015.09.04 ஆந் திகதியிட்ட அவரது தொடர்பு இல. Anu/21/5/4/4/19 இன் கீழ் காணியை வங்கிக்கு ஈடுவைப்பதற்கு முன் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## இரண்டாவது அட்டவணை

ஒதுக்கங்கள் :

01. வைத்திருப்பவையின் பேரில் அல்லது கனிப்பொருள் கள் எல்லாவற்றுக்கும் (இவ் வழங்கலில் பெறுமதி வாய்ந்த கற்கள் உட்பட) உரிமையும் எவையேனும் அத்தகைய கனிப்பொருள்களை அகற்றுவதற்கோ, தேடி எடுப்பதற்கோ,வேலை செய்வதற்கோ அகழ்வதற்கோ வைத்திருக்கும் உரிமை அரசாங்கத்துக்கு ஒதுக் கப்பட்டுள்ளது.

2. இவ் வழங்கல் திகதியில் தற்சமயம் வைத்திருப்பவை மீதான வழி உரிமை அல்லது ஏனைய பணிகளுக்கு சொந்தக்காரருக்கான உரித்து உரிமை.

நிபந்தனைகள் :

1. உரிமையாளர்கள் குறித்த உப பிரிவின் விஸ்தீரணத்தில் 1/4 ஏக்கர் மேட்டு நிலம் 1 1/2 ஹெக்டேயர் /ஏக்கர் நீர்ப்பாசனக் காணி அலகு அல்லாது காணப்படும் பிரிக்கப்பட்டதொரு பாகத்தை விற்பனை செய்யலாகாது.

2. இங்கு குறித்த ஆகக் குறைந்தபகுதி 1/4 ஏக்கர்கள் தவிர்ந்த வைத்திருக்கும் பிரிக்கப்படாத பங்கை உரிமையாளர்கள் விற்பனை செய்தலாகாது.

3. நிபந்தனை 1 இல் குறிப்பிட்ட உப பிரிவின் அலகு தவிர்ந்த விஸ்தீரணத்தில் வைத்திருக்கும் பிரிக்கப்பட்ட குறைந்த பாகத்துக்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.

4. நிபந்தனை 2 இல் குறிப்பிட்ட ஆகக் குறைந்த பகுதி தவிர்ந்த வைத்திருப்பவைகளின் பிரிக்கப்படாத பங்குக்கு ஒருவரும் உரிமையாளராக முடியாது.

5. வைத்திருப்பவை அல்லது நீர்ப்பாசன வசதியளிக்கக்கூடிய எவையேனும் பகுதி அல்லது இதன் பின்பு நீர்ப்பாசன கட்டளைச்சட்டத்தின் முன் ஏற்பாடுகளின் (அத்தியாயம் 453) கீழ் மற்றும் அதன் கீழான எவையேனும் விதிகளுடன் நீர்ப்பாசன பிரதேசம் தொடர்பில் நிர்மாண வேலையில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட எவையேனும் நீர்ப்பாசன வேலை அல்லது இதன் பின்பு நிர்மாணிக்கப்படுபவை தொடர்பில் உரிமையாளர் இணங்க வேண்டும்.

6. அரசாங்க அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகார சபையிடமிருந்து எழுத்தில் அனுமதி பெற்றால் அன்றி எந்தவொரு கனிப்பொருளை தேடவே, அகழ்வதற்கோ அல்லது காணியை விற்பதற்கோ உரிமையாளருக்கு முடியாது.

7. பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான முன் அனுமதி இன்றி இதன் எந்தவொரு பகுதியையும் வைத்திருக்க ஏற்பாடு இல்லை.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பி. ஆர். ஜே. பி. பலிஹேன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கெகிராவ.

8- 955

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இலக்கங்கள். 76621901 மற்றும் 76622242

மொரட்டுவை, சென்ட் பீட்டர்ஸ் வீதி , தூவவத்த பாதை, இல. 113/9 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. தொன் லால் அந்தனி அமரசிங்ஹ ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக் கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2017.01.27 ஆந் திகதிய 1978 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2017.01.17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் , அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியில் அமைந்துள்ள திருவாளர்கள் ரி அன்ட் எச் ஒக்‌ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் தரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2017.09.27 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லேபற்றுவில் மொரட்டுமுல்ல கிராம அலுவலர் பிரிவில் மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் மொரட்டுவை மாநகர சபை எல்லைக்குள் திகரோல்லயில் அமைந்த "தூவவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜீ. ரணசிங்ஹ தயாரித்த 2003, ஏப்பிறல் 22 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1598 இல் விபரித்த துண்டு 8 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : துண்டு 13 உம் ; கிழக்கு : துண்டுகள் 13 மற்றும் 7 உம் ; தெற்கு : வீ. எஸ். எம். த மெல் என்பவரின் ஆதனமும் ; மேற்கு : துண்டு 9 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.1598 இன்படி பதினைந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15பே.) அல்லது 0.03794 ஹெக்டேயர் விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந் துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது தெல்கந்த- நுகேகொடை காணிப்பதிவகத்தில் D 62/106 இல் பதிவு செய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

1. மேற்குறிப்பிட்ட திகரொல்லையில் அமைந்த "தூவவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஜீ. ரணசிங்ஹ தயாரித்த 2008, மாச்சு 05 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1561 இல் விபரித்த துண்டு 3 (26 சங்கிலி அகலமான பாதை) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : துண்டு 1 உம் ; கிழக்கு : துண்டு 1 உம் ; தெற்கு : துண்டு 1 உம் ; மேற்கு : 20 அடி அகல பாதையும் (வரைபட இல. 3135A இல் துண்டு A) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1561 இன் படி பதினொன்று தசம் இரண்டு ஏழு பேர்ச்சு (0ஏ. 0றூ. 11.27பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது தெல்கந்த - நுகேகொடை காணிப்பதிவகத்தில் D 62/31 இல் பதிவு செய்யப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட திகரொல்லையில் அமைந்த "தூவவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. ஏ. சேனாரத்ன தயாரித்த 1965, மே 06 ஆந் திகதியிட்ட வரைபட இல. 3135A இல் விபரித்த துண்டு A (20 அடி அகலப் பாதை) என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : துண்டுகள் 7 உம்; கிழக்கு : துண்டுகள் 8, 9, 10, 11, 12மற்றும் 13 ; தெற்கு: மோதர வரை திகரொல்ல பாதையும்; மேற்கு : அதேகாணியின் துண்டுகள் 1, 2, 3, 4,5 மற்றும் 6 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 3135A இன் படி ஒரு றூட் ஒன்று தசம் ஒன்பது பேர்ச்சு (0ஏ. 1றூ. 1.9பே.) விஸ்தீரணமுடையது. இது தெல்கந்த - நுகேகொடை காணிப்பதிவகத்தில் D 62/32 இல் பதிவு செய்யப்பட்டது.

3. மேற்குறிப்பிட்ட திகரொல்லையில் அமைந்த "தூவவத்த" என அழைக்கப்படும் காணியின் வரைபட இல. 1598 இல் விபரித்த துண்டு 13 (20 அடி அகலப் பாதை) என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : துண்டுகள் 2, 3, 4 மற்றும் 5 உம் ; கிழக்கு : துண்டுகள் 5, 17 மற்றும் 6 உம் ; தெற்கு : துண்டுகள் 7, 8, 9 மற்றும் 10 உம் ; மேற்கு : (வரைபடம் இல. 3135 ஏ இல் துண்டு ஏ) 20 அடி அகலமான தூவவத்த வீதியும் துண்டுகள் 8 மற்றும் 3 உம் ; எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1598 இன் படி பதின்மூன்று தசம் ஒன்று ஐந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 13.15பே.) அல்லது 0.03326 ஹெக்டேயர் விஸ்தீரணமுடையது. இது தெல்கந்த - நுகேகொடை காணிப்பதிவகத்தில் D 62/33 இல் பதிவு செய்யப்பட்டது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி ) எம். ஏ. இஸட் . கே. முர்சிடா,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
வெள்ளவத்தை .

8- 956

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.